

சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (10.02.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நடைபெற்ற "பொங்கல் உழவும் மரபும்" கலைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் . வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் திரு. ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனிடம் தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் பணியாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் 31.03.2025 உடன் முடிவடைய உள்ள நிலையில் 01.04.2025முதல் புதிய ஊதிய உயர்வுக்கான கோரிக்கைகளை தொ.மு.ச.பேரவைத்தலைவர் கி.நடராஜன்,பொதுச்செயலாளர் மு.சண்முகம், பொருளாளர் கோ.சி. வள்ளுவன், துணைத்தலைவர் இரா.பொன்னுராம் ஆகியோரின் ஒப்புதலுடன் மாநில பொதுச்செயலாளர் டியுசிஎஸ். சு.பத்மநாபன் வழங்கினார். அதுபோது மாநிலத்தலைவர்.து.பிச்சை,டியுசிஎஸ் தி.தொ.மு.ச.பொதுச்செயலாளர் இராஜன்சாமிநாதன், சென்னை சிந்தாமணி தொ.மு.ச.பொதுச்செயலாளர் ஜெ.அலிசன் ஆகியோர் உடனிருந்தனர்.

### நகைக் கடன்: ஏலம் விடும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த

# ஒன்றிய அரசு ஏதும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

## மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, பிப்.11-**

**அதிகரிக்கும் நகைக் கடன் ஏலங்கள் பற்றி கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி எழுப்பிய கேள்வியைத் தொடர்ந்து ஒன்றிய நிதி அமைச்சர் அதற்கு பதிலளித்தார்.**

இதுபற்றிய விவரம் வருமாறு :-

மக்களவையில் நேற்று (பிப்ரவரி 10) தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி "வங்கி அல்லாத தங்க நகை அடகு நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் நகைகளை ஏலம் விடுவது, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக, இந்த நிதியாண்டின் (2024-25) இரண்டாவது காலாண்டில் இருந்து அதிகரித்திருக்கிறது.

வங்கி சாராத நிதி நிறுவனங்களில் தங்க நகை கடன் வாங்கியோர் அதை திருப்பிக் கட்ட போதிய கால அவகாசம் கொடுக்கப்படாத நிலையில்.... இதுபோல திடீர் ஏலங்களால் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர். பெருமளவிலான இந்த ஏலம் விடும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அரசு ஏதும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மேலும் ரிசர்வ் வங்கி, கடந்த ஆண்டு வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கு (NBFCs) தங்கக் கடன்களுக்கான ரொக்க விநியோகத்தை ரூ.20,000 ஆகக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது. நாட்டில் 36% பேருக்கு வங்கிக் கணக்கே இல்லாத நிலையில்... வங்கி அல்லாத கடன் நிறுவனங்களின் தங்க கடன்களுக்கான ரொக்க விநியோகத்தை 20 ஆயிரம் ஆக கட்டுப்படுத்துவது ஏன்?" என்று கேள்விகளை எழுப்பினார்.



இவற்றுக்கு ஒன்றிய நிதித் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலளிக்கையில்,

"வங்கிகள் அல்லாத கடன் நிறுவனங்கள், மற்றும் வணிக வங்கிகள் அனைத்துக்கும் இது தொடர்பாக ஒரே மாதிரியான விதிமுறைகளைத்தான் ரிசர்வ் வங்கி வகுத்துள்ளது.

நிதித்துறை இணையமைச்சர் கூறியது போல, இந்த நகை ஏலம் என்பது பல கட்ட செயல்முறைகளின் தொடர்ச்சியாகவே நடைபெறுகிறது. சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு நகைக் கடன் பாக்கி தொடர்பான தகவல்கள் அனுப்பப்பட்டு, அதன் பிறகே, ஏல நடவடிக்கை என்ற சூழலுக்கு தள்ளப்படுகிறது.

இன்னும் சொல்லப் போனால், ஏல நடவடிக்கைகள் கடுமையான நிபந்தனைகளுக்குப் பிறகுதான் மேற்கொள்ளப்படுகின்றன. வாடிக்கையாளர் சார்ந்த மாவட்டத்துக்குள்தான் ஏலம் நடத்தப்பட வேண்டும், சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் நேரில் வராவிட்டால் ஏலம் நடத்த முடியாது, நகை மதிப்பீடு முழுமையடையாவிட்டால் ஏலம் விட முடியாது, ஏலத் தொகை நிர்ணயம் செய்வதிலும் பல விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. கடந்த 3, 4 மாதங்களிலான நகை விலையில் 80%க்கு குறைவாக இருக்கக் கூடாது. தங்கத்தின் விலையை வங்கிகள் அல்லாத கடன் நிறுவனங்கள் நிர்ணயம் செய்வதில்லை.

ஏல நடவடிக்கைகளுக்கு முன் இது போன்ற கடுமையான நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றன, இந்த நிபந்தனைகள் பின்பற்றப்படாமல் நகை ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், நிபந்தனைகள் எங்காவது மீறப்பட்டிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் உடனடியாக எனது கவனத்துக்குக் கொண்டு வரலாம்.

அதேபோல தங்க கடன்களுக்கான ரொக்கம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட விலையில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குறிப்பிட்ட நிகழ்வுகள் இருந்தால் அதையும் உறுப்பினர் எனது கவனத்துக்குக் கொண்டு வரலாம். அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கிறேன்" என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலளித்தார்.

# தமிழ்நாட்டின் பாரம்பரிய கலை, பண்பாட்டை மேம்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

## ஒன்றிய அரசுக்கு - மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

*புதுடெல்லி, பிப். 11-*

தமிழ்நாட்டின் பாரம்பரிய கலை, பண்பாடு, நடனம், நாடகம், பாட்டுக் கலைஞர்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்கு அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா, அவ்வாறாயின், அதன்விவரங்கள்; கடந்த பத்து ஆண்டுகளில் ஒவ்வொரு மாநிலத்திலும் கலைஞர்களின் நலனுக்காக அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட மொத்த நிதி; மற்றும் கடந்த பத்து ஆண்டுகளில் அமைச்சகத்தின் கலாச்சார பரிமாற்றத் திட்டங்கள், பிற திட்டங்களின் கீழ் வெளிநாடுகளுக்குச் சென்றமொத்த கலைஞர்களின் எண்ணிக்கை? விவரம் என்ன என்று மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.



அதற்கு ஒன்றிய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெக்காவத் அளித்துள்ள பதில்கள் வருமாறு:-

ஆம், கலாச்சார அமைச்சகம் பல்வேறு ஒன்றிய துறை திட்டங்களை நிர்வகிக்கிறது, இதன் கீழ் தமிழ் நாடு உட்பட நாடுமுழுவதும் பாரம்பரிய கலை, நடனம், நாடகம், இசை போன்ற நிகழ்த்துக்கலைகளை மேம்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் துறையில் பணிபுரியும் தகுதியுள்ள கலாச்சார அமைப்புகள்/ தனிப்பட்ட கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டங்களின்சுருக்கம் இணைப்பு I இல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒன்றியத் துறைத் திட்டங்களின் கீழ், மாநில வாரியாக நிதிஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடு எதுவும் இல்லை. அதற்கு பதிலாக, அங்கீகரிக்கப்பட்ட கலாச்சார அமைப்புகள் மற்றும் தனிப்பட்ட கலைஞர்களுக்கு நிதி உதவி நேரடியாக வழங்கப்படுகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் கலாச்சார அமைப்புகள் / தனிப்பட்ட கலைஞர்களுக்கு ஆண்டு வாரியாக, திட்டம் வாரியாக விடுவிக்கப்பட்ட நிதி இணைப்பு II இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சகத்தின் 'உலகளாவிய ஈடுபாட்டுத் திட்டத்தின்' கீழ், கடந்த பத்து ஆண்டுகளில், மொத்தம் 2348 கலைஞர்களைக் கொண்ட 263 குழுக்களாக வெளிநாடுகளில் 'இந்திய விழாக்களில்' பங்கேற்றுள்ளன. இவற்றில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 கலைஞர்களைக் கொண்ட 1 குழு ரஷ்யாவில் (2018) நடைபெற்ற இந்திய விழாவில் நிகழ்ச்சி நடத்த அனுப்பப்பட்டது. கூடுதலாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 கலைஞர்களைக் கொண்ட 2 குழுக்கள் செக் குடியரசு (2017) மற்றும் ஸ்பெயினில் (2017) நடைபெற்ற சுதந்திரம் 70 நிகழ்வுகளில் நிகழ்ச்சி நடத்த அனுப்பப்பட்டன.

இணைப்பு: 1. குருசிஷ்ய பரம்பரை (பதிவு மானியம்) மேம்பாட்டிற்கான நிதி உதவி நாடகக் குழுக்கள், நாடகக் குழுக்கள், இசைக் குழுக்கள், குழந்தைகள் நாடகம் போன்ற அனைத்து வகையான நிகழ்த்துக் கலை நடவடிக்கைகளுக்கும் நிதி உதவி வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். குருசிஷ்ய பரம்பரைக்கு இணங்க, கலைஞர்களுக்கு அவர்களின் குருவால் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்படி, நாடகத் துறையில் 1 குருவுக்ும் அதிகபட்சம் 18 சிஷ்யர்களுக்கும், இசை மற்றும் நடனத் துறையில் 1 குருவுக்கும் அதிகபட்சம் 10 சிஷ்யர்களுக்கும் ஆதரவு வழங்கப்படுகிறது. குருவுக்கு மாதத்திற்கு ரூ.15000/ மற்றும் சிஷ்யருக்கு, கலைஞரின் வயதைப்பொறுத்து மாதத்திற்கு ரூ.200010000/ ஆகும்.

2. கலை மற்றும் பண்பாட்டை மேம்படுத்துவதற்கான நிதி உதவி: இந்தத் திட்டம் பின்வரும் துணைக் கூறுகளைக் கொண்டுள்ளது:

i. தேசிய அளவில் கலாச்சார அமைப்புகளுக்கு நிதி உதவி: நாடுமுழுவதும் கலை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள தேசிய அளவில் கலாச்சார அமைப்புகளை ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும், இந்த மானியம் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட, முறையாக அமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பைக் கொண்ட, அதன் செயல்பாட்டில் தேசிய அளவில் இருப்புடன் கூடிய, போதுமான பணிபலத்தைக் கொண்ட, மற்றும் கடந்த 5 ஆண்டுகளில் ஏதேனும் 3 ஆண்டுகளில் கலாச்சார நடவடிக்கைகளுக்காக 1 கோடி அல்லது அதற்கு மேல் செலவிட்ட அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத்திட்டத்தின் கீழ் மானியத்தின் அளவு ரூ.1 கோடி வரை இருக்கும், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் ரூ. 5 கோடி வரை அதிகரிக்கலாம்.

ii. கலாச்சார செயல்பாடு மற்றும் உற்பத்தி மானியம் (CFPG)

இந்தத் திட்டத்தின் நோக்கம், கருத்தரங்குகள், மாநாடுகள், ஆராய்ச்சி, பட்டறைகள், விழாக்கள், கண்காட்சிகள், கருத்தரங்குகள், நடனம், நாடக அரங்கம், இசை போன்றவற்றுக்கு அரசு சாரா நிறுவனங்கள்/ சங்கங்கள் / அறக்கட்டளைகள் / பல்கலைக்கழகங்கள் போன்றவற்றுக்கு நிதி உதவி வழங்குவதாகும். CFPG இன் கீழ் வழங்கப்படும் அதிகபட்ச மானியங்கள் ஒரு நிறுவனத்திற்கு ரூ.5 லட்சம் ஆகும், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் ரூ.20.00 லட்சமாக அதிகரிக்கப்படலாம்

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### பொங்கல் திருநாளையொட்டி – 'பொங்கல் உழவும் மரபும்' என்ற தலைப்பில்

# போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

*சென்னை, பிப்.11-*

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் சார்பில் பொங்கல் திருநாளை முன்னிட்டு 'பொங்கல் உழவும் மரபும்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பல்வேறு வகையான போட்டிகளில் வெற்றி பெற்ற 36 நபர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார்.

அய்யன் திருவள்ளுவர், "சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்கிறார். அதாவது, உலகம் பல தொழில் செய்து துன்புற்றாலும் இறுதியில் உழவுத் தொழிலே சிறந்தது என்பது அவரது திடமான கருத்து. விவசாயம் செழித்தால் மட்டுமே மனிதர் வாழ்வு மேன்மையுறும். நமது மரபையும் வாழ்வியலையும் பறைசாற்றும் பொங்கல் திருவிழா நீண்ட நெடுங்காலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

விவசாயம், இயற்கை, கதிரவன், உழவுக்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகள் ஆகியவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், மரபையும் - உழவுத்தொழிலையும் கொண்டாடும் வகையிலும் பொங்கல் விழாவை ஆண்டு தோறும் கொண்டாடி வருகிறோம்.

நமது நீண்ட மரபையும், விவசாயம், கால்நடைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் இளம் தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பது நமது கடமையாக உள்ளது. பொங்கல் என்பது வெறும் விழா மட்டுமல்ல, அது ஒரு பண்பாட்டின் அடையாளம் என்பதை மாணவர்கள், இளைஞர்கள் புரிந்து தெளிவு பெறுவதற்கு பொங்கல் விழா உதாரணமாக உள்ளது.

நமது பண்பாட்டு விழுமியங்களான, வீரம், கொடை, உழைப்பு ஆகியவற்றை உணர்த்தும் இந்தப் பொங்கல் திருநாளுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் கோலப் போட்டி, ஓவியப் போட்டி, புகைப்படப் போட்டி, ரீல்ஸ் போட்டி, பாரம்பரிய உடைப் போட்டி, மண்பானை அலங்கரித்தல் போட்டி, சுயமிப் போட்டி ஆகிய கலைப்போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டியாளர்களிடமிருந்து ஒட்டுமொத்தமாக 6154 படைப்புகள் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டன. அதில் கோலப் போட்டிக்கு 1682 நபர்களும், ஓவியப் போட்டிக்கு 1276 நபர்களும் புகைப்படப் போட்டிக்கு 864 நபர்களும், ரீல்ஸ் போட்டிக்கு, 518 நபர்களும், பாரம்பரிய உடை புகைப்படப் போட்டிக்கு 494 நபர்களும், மண் பானை அலங்கரித்தல் போட்டிக்கு 490 நபர்களும், சுயமிப் போட்டிக்கு 830 நபர்களும் தங்களது படைப்புகளை அனுப்பியிருந்தார்கள். அதில் சிறந்த படைப்புகளை அளித்த 36 நபர்கள் வெற்றி பெற்றவர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (10.02.2025) சென்னை கலைவாணர் அரங்கில், செய்தி மக்கள் தொடர்புத்துறை ஊடக மையம் சார்பில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு 'பொங்கல் உழவும் மரபும்' என்ற தலைப்பில் பல்வேறு வகையான போட்டிகளில் வெற்றி பெற்ற 36 நபர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராம், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ். செல்வராஜ் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை உயர் அலுவலர்கள், ஊடக மைய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தைப்பூசத்தை முன்னிட்டு சென்னை, ஏழுகிணறு பகுதியில்

# வள்ளலார் வசித்த இல்லத்தில் அன்னதானம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

*சென்னை, பிப்.11*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தைப்பூசத்தை முன்னிட்டு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று (11.02.2025) சென்னை, ஏழுகிணறு பகுதியில் அமைந்துள்ள திருஅருட்பிரகாச வள்ளலார் வசித்த இல்லத்தில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை அன்னதானம் வழங்கும் நிகழ்வை தொடங்கி வைக்கிறார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் பிறந்த அக்டோபர் 5-ஆம் நாள் ஆண்டுதோறும் "தனிப்பெருங்கருணை நாள்" என கடைபிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. உயிர்த்திறள் ஒன்றெனக்கூறி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் பெருமானார் தருமசாலை துவக்கிய 156வது ஆண்டு தொடக்கமும், வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200வது ஆண்டு தொடக்கமும், ஜோதி தரிசனம் காட்டுவித்த 152 வது ஆண்டும் இணைத்து அவரது 200வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது.

முதல் நிகழ்வாக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 05.10.2022 அன்று நடைபெற்ற முப்பெரும் விழாவில் தொடக்க நிகழ்வில் "வள்ளலார் - 200" இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, 52 வாரங்களுக்கான விழாக்களில் முதல் வார நிகழ்ச்சிகளையும், ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் வள்ளலாரின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையில் 52 வாரங்கள் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, அ ன் ன த ா ன த் ்தை யு ம் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வுக்காக தமிழ்நாடு அரசு ரூ.3.25 கோடியை அரசு மானியமாக வழங்கியது.

முதலமைச்சர் அவர்கள் 05.10.2023 அன்று நடைபெற்ற "வள்ளலார் - 200" தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் சிறப்பு புகைப்பட கண்காட்சியினை திறந்து வைத்து, ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் வள்ளலார் சர்வதேச மையம் அமைப்பதற்கான அரசாணையை வழங்கினார். மேலும், அரசு நிதி ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் , வள்ளலார் அவதரித்த மருதூர் இல்லம் ஆகியவற்றை திரும்ப கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தைப்பூசத்தை முன்னிட்டு வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில் மூன்று நாட்களுக்கு தினமும் 10,000 சன்மார்க்க அன்பர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது.

சென்னை, ஏழுகிணறு பகுதியில் அமைந்துள்ள திருஅருட்பிரகாச வள்ளலார் வசித்த இல்லத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்வை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சன்மார்க்க அன்பர்களர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி கிழக்கு ஒன்றியம் பீர குப்பத்தில் உள்ள கிளைக் கழகச் செயலாளர் நவீன் அண்மையில் இயற்கை எய்தினார் இந்நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அவரது குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்கி ஆறுதல் கூறினார். உடன் ஒன்றிய கழக பொறுப்பாளர் கே.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி 151வது வார்டு,போரூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மாணவ செல்வங்களின் நலனுக்காக வருடம் ஒரு முறை பற்கள் சோதனை மற்றும் குடற்புழுக்களை ஒழிக்க (அல்பெண்டசோல் மாத்திரை) மருந்து உட்கொள்ளும் சிறப்பு முகாமினை சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச. சங்கர் கணேஷ் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியை, மாநகராட்சி மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத் துறை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.